செய்தி வெளியீடு ***நாள் : 26.07.2025***

கொளத்தூர் சட்டமன்றத் தொகுதியில் வடசென்னை வளர்ச்சி திட்டத்தின்கீழ் சி.எம்.டி.ஏ. மற்றும் நெடுஞ்சாலைத்துறை சார்பில் மேற்கொள்ளப்பட்டு வரும் பல்வேறு வளர்ச்சி திட்டப்பணிகளின் முன்னேற்றம் குறித்து மாண்புமிகு அமைச்சர்கள் திரு. எ.வ.வேலு மற்றும் திரு.பி.கே.சேகர்பாபு ஆகியோர் நேரில் சென்று ஆய்வு மேற்கொண்டு, பணிகளை விரைந்து முடித்திட பொறியாளர்கள் மற்றும் ஒப்பந்ததாரர்களை அறிவுறுத்தினர்.

****

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் நல்வழிகாட்டுதலின்படி இன்று *(26.7.2025)* வடசென்னை வளர்ச்சி திட்டத்தின்கீழ் சென்னை, கொளத்தூர் சட்டமன்றத் தொகுதி, அகரம், ஜெகநாதன் தெருவில் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத்தின் சார்பில் ரூ.12 கோடி மதிப்பீட்டில் புதிதாக கட்டப்பட்டு வரும் மறுவாழ்வு மற்றும் இரத்த சுத்திகரிப்பு மையத்தினையும் *(Kolathur Dialysis Centre)*, சென்னை, பேப்பர் மில்ஸ் சாலை, ராஜா தோட்டத்தில் தமிழ்நாடு நகர்புற வாழ்விட மேம்பாட்டு வாரியம் சார்பில் ரூ.27.71 கோடி மதிப்பீட்டில் கட்டப்பட்டு வரும் 161 புதிய குடியிருப்புகளின் கட்டுமானப் பணிகளையும், சென்னை, பேப்பர் மில்ஸ் சாலையில் ரூ.23.50 கோடி மதிப்பீட்டில் புதிதாக கட்டப்பட்டு வரும் நவீன சந்தையும் *(Kolathur Modern Market)*, சென்னை, பேப்பர் மில்ஸ் சாலையில் ரூ.42 கோடி மதிப்பீட்டில் கட்டப்பட்டு வரும் புதிய வட்டாட்சியர் அலுவலகம், சார் பதிவாளர் அலுவலகம், பகிர்ந்த பணியிட மையம் எனப்படும் 'மக்கள் சேவை மையத்தையும் *(Citizen Service Centre)*' மற்றும் கொளத்தூர் ரெட்டேரி அருகிலுள்ள ஏரிக்கரையை ரூ.5 கோடி மதிப்பீட்டில் மேம்படுத்தப்படும் முன்னேற்றப் பணிகள் குறித்தும் மற்றும் கொளத்தூர் ரெட்டேரி சாலை சந்திப்பில் உள்ள 7 மீட்டர் அகலமும், 600 மீட்டர் நீளமும் கொண்ட சேவை சாலைகளை சீரமைப்பது குறித்தும் மற்றும் ரூ.5 கோடி மதிப்பீட்டில் நெடுஞ்சாலைத்துறை சார்பில் ரெட்டேரி உயர்மட்ட பாலத்தின்கீழே அழகுபடுத்துதல் பணிகள் குறித்தும் மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் **திரு.எ.வ.வேலு அவர்கள்** மற்றும் மாண்புமிகு சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழும அமைச்சர் (ம) தலைவரும் மற்றும் இந்து சமய அறநிலையத்துறை அமைச்சருமான **திரு.பி.கே.சேகர்பாபு அவர்கள்** ஆகியோர் நேரில் சென்று பார்வையிட்டு ஆய்வு செய்தனர்.

இந்த ஆய்வுகளின்போது வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை முதன்மைச் செயலாளர் திருமதி.காகர்லா உஷா, இ.ஆ.ப., சிஎம்டிஏ முதன்மை செயல் அலுவலர் திரு.அ.சிவஞானம், இ.ஆ.ப., அவர்கள், மாநகராட்சி மத்திய வட்டார துணை ஆணையர் திரு.எச்.ஆர்.கௌஷிக், இ.ஆ.ப., மண்டலக் குழுத்தலைவர் திருமதி.சரிதா மகேஷ்குமார், நெடுஞ்சாலைத்துறை சிறப்பு தொழில்நுட்ப அலுவலர் திரு.சந்திரசேகர், தலைமை பொறியாளர் திரு.சத்திய பிரகாஷ், சி.எம்.டி.ஏ. தலைமைப் பொறியாளர் திரு.மகாவிஷ்ணு, கண்காணிப்பு பொறியாளர்கள் திரு.ராஜமகேஷ்குமார், திரு.பாலமுருகன், கண்காணிப்பு பொறியாளர் (நெடுஞ்சாலைத்துறை) திரு.சரவண செல்வம், கண்காணிப்பு பொறியாளர் (குடிநீர் வடிகால் வாரியம்) திரு.ராதாகிருஷ்ணன், மண்டல அலுவலர் திரு.சரவணன், செயற்பொறியாளர்கள் திரு.ராஜன்பாபு, திரு.சதீஷ், உள்ளாட்சி பிரதிநிதிகள் திரு.ஐ.சி.எப். முரளிதரன், திரு.மகேஷ்குமார், மாமன்ற உறுப்பினர்கள் திரு.நாகராஜன், திருமதி.தாவூத்பீ, திருமதி.அமுதா, திருமதி.யோகபிரியா, திருமதி.ஸ்ரீதணி, மற்றும் மாநகராட்சி அலுவலர்கள் ஆகியோர் உடனிருந்தனர்..

Verified